**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(11.03.2015 முதல் 15.03.2015)**

**அறிக்கை எண் 19/2015** **தேதி: 10.03.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 27°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 09°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (11.03.2015 முதல் 15.03.2015)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 82 முதல் 87 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 38 முதல் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9 கி.மீ முதல் 10 கி.மீ அளவுக்கு வட கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசை வரை வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11.03.15 | 0 | 34 | 23 | 2 | 82 | 40 | 10 | தென்கிழக்கு |
| 12.03.15 | 0 | 34 | 23 | 3 | 83 | 39 | 9 | வட கிழக்கு |
| 13.03.15 | 0 | 34 | 23 | 2 | 86 | 38 | 10 | வட கிழக்கு |
| 14.03.15 | 0 | 34 | 23 | 3 | 87 | 38 | 10 | வட கிழக்கு |
| 15.03.15 | 0 | 34 | 23 | 3 | 86 | 39 | 9 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடையில் காணப்படும் மழையை பயன்படுத்தி ஏப்ரல் மாதத்தில் கம்பு விதைப்பதற்கு நிலம் தயார் செய்யவும்.
- ✓ கோடையில் காணப்படும் மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்வதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சி, நோய் தாக்குதலையும் கட்டுப்படுத்தலாம்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் புகையிலை அறுவடையை தள்ளிப்போடவும். மேலும் அறுவடை செய்து காயவைத்து கொண்டிருந்தால் தார்பாய் கொண்டு மூடி வைக்கவும்.
- ✓ தென்னை மரத்தில் காய்ந்த மட்டைகள் மற்றும் பண்ணாடைகளை (சிரை எடுத்தல்) அகற்றி மரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளுவதன் மூலம் பூச்சி நோய் தாக்காமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.
- ✓ கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடை பெற்று வருவதால் விவசாயிகள் தவறாமல் தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் புகையிலை அறுவடையை தள்ளிப்போடவும். மேலும் அறுவடை செய்து காயவைத்து கொண்டிருந்தால் தார்பாய் கொண்டு மூடி வைக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**